


# கோபுரம், மின்தூக்கி பூர்த்தி

## சிறப்பு மலர்

14.05.2016


**HIGHGATEHILL MURUGAN TEMPLE**

**200A Archway Rd, London N6 5BA**





Aum Muruga

**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**

**உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

Established 1974, Registered Charity No : 269067

200A Archway Road, London N6 5BA.

Tel : 020 8348 9835 | Fax : 020 8482 6508.

E-mail : secretary@highgatehillmurugan.com Web : www.highgatehillmurugan.org

# Message from the Chairman
# Brittania Hindu Temple Trust

Greetings from the devotees of the Highgatehill Murugan Temple and from the Members of the Brittania Hindu (Shiva) Temple Trust.

We are delighted and honoured to have you here, to participate and share the culutral event, celebrating the completion of the Lift and Gopuram Project.

Many of you have travelled a long distance reminding all, how importance you have given to the success of the project.

I thank you all on behalf of the Temple Management.

**A. Vairavamoorthy**
Chairman,
Brittania Hindu (Shiva) Temple Trust




Aum Muruga

**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**

**உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

Established 1974, Registered Charity No : 269067

200A Archway Road, London N6 5BA.

Tel : 020 8348 9835 | Fax : 020 8482 6508.

E-mail : secretary@highgatehillmurugan.com Web : www.highgatehillmurugan.org


# முகவுரை

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பர். எங்கள் ஆலயத்திலும் நீண்ட காலமாகக் கோபுரம் இல்லாமல் இருந்தது. எங்கள் ஆலயத்தினை வீதியில் நின்று அன்பரொருவர் பார்த்தால் இது ஒரு கிறிஸ்தவர்களுடைய தேவாலயம் என்றே எண்ணுவார்கள். 1979ம் ஆண்டு வாங்கிய கட்டிடத்தினைச் சைவக் கோவிலாக வழிபடுவதற்கு அனுமதி வழங்கிய நகரசபை, வெளிப்புறத் தோற்றத்தினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கவில்லை. 1986 ஆம் ஆண்டு நடந்தேறிய குடமுழுக்கு விழா, வெளிப்புற மாற்றமேதுமின்றி நடந்தேறியது.

நாளடைவில் நாட்டிலே ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் ஈழத் தமிழர்கள் எல்லா நகரசபைகளிலும் குடியேறியதனைத் தொடர்ந்து எல்லா நகரசபைகளிலும், மாற்றங்கள் ஏற்படவே எங்கள் ஆலய அடியார்களும் கோபுரம் எங்கள் ஆலயத்திற்கும் தேவையென்பதனை உணர்ந்து நகரசபையுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினர. இந்த வரிசையில் அண்மையில் அமரரான பொறியியலாளர் இரத்தினம் சர்வானந்தனை மறக்க முடியாது. அவர் மறைந்த பின்னர் கோபுரத்திற்குப் பொறுப்பாகப் பொறியிலாளர் திரு இராசையா ஜெயராசா என்பவரை அறங்காவற்குழு நியமித்தது.

வெம்பரி வீதியிலிருந்து உடல் வலுவிழந்தோர் சக்கர வண்டியிலே கல்யாண மண்டபத்திற்கும், கழிவறைக்கும் செல்லுவதற்குமான வாசலைச் செய்ததன் பின்னர் மின் தூக்கியைத் தாபித்ததனாற் கோவிலுக்கு, கல்யாண மண்டபத்திற்கு, உணவருந்தும் மாடிக்கும் இலகுவாக எல்லோரும் செல்ல வாய்ப்புண்டாயிற்று. மேற்குறிப்பட்ட வேலைகட்கும் கோபுரத்திற்கும் முதலில் வங்கிக் கடனுதவி கிடைத்தது. அதனைத் தொடர்ந்து பல அடியார்கள் மனமுவந்து அன்பளிப்புச் செய்ததனால் பணிகள் இலகுவாக விரைவாக முற்றுப்பெற்றன.

இவ்வேலைகளைப் பலர் பொறுப்பாக இருந்து செய்து முடித்துள்ளனர். படம் வரைந்தோர், நில அளவையாளர், உள்ளூராட்சி ஊழியர்கள், சட்டத்தரணிகள், தொழில் நுட்பவியலாளர்கள், இன்னோரன்ன பலர் ஓயாது உழைத்தனர். மேலும் தமிழ் நாட்டிலிருந்து திரு தியாகராசன் தலைமையில் வந்த தொழிலாளத் தோழர்களின் கைவண்ணத்தினால் கோபுரம் முற்றுப்பெற்றது.

காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது. என்ற குறளினை மனதினிற் கொண்டு இந்த வேலைகள் அனைத்தும் செய்து முடிப்பதற்கு உழைத்த பெருந்தகையோரைப் பாராட்டி அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கிக் கௌரவிப்பதற்காக 14 மேமாதம் 2016 சனிக்கிழமை அன்று மாலை விழாவினை ஒழுங்கு செய்துள்ளோம். கோபுர வேலை சீர்பெற உழைத்த அன்பளிப்புச்செய்த அனைவருக்கும் எல்லாம் வல்ல முருகப்பெருமான் அருள்புரிவாராகுக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**முருகப்பெருமான் பணியில்.**

**க.நாகராசா.**

செயலாளர், பிரித்தானிய இந்து(சிவா) கோவில் அறங்காவற் குழு




Aum Muruga

BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

**உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

Established 1974, Registered Charity No : 269067

200A Archway Road, London N6 5BA.

Tel : 020 8348 9835 | Fax : 020 8482 6508.

E-mail : secretary@highgatehillmurugan.com Web : www.highgatehillmurugan.org




# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

குன்று இருக்குமிடமெல்லாம் குமரன் இருப்பான் என்ற கூற்றுக்கமைவாக உயர்வாசற்குன்று என்ற பதியினிலே குமரன் முதல் குடிபுகுந்தான். அதன் பின்னர் தனது ஆலயம் பூரணம் அடைவதற்காக கோபுரத்தையும் அமைத்தான்.

ஆலயத்தின் கோபுர முக்கியத்துவத்தை பார்ப்போமாக இருந்தால் ஊரில் கோவில் கோபுரம் மட்டுமே உயரமாக இருக்க வேண்டும் என்பது ஏன்?..... முற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்தது என்ன காரணம்? கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அதன் பின் ஒளிந்திருக்கும் ஆன்மிக உண்மை தெரியவில்லை. ஆனால் அதன் பின் எவ்வளவு பெரிய அறிவியில் ஒளிந்திருக்கிறது என இப்போதுதான் தெரிகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி செம்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களிலும் அதில் போடப்படும், தானியங்களும், உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்குக் கொடுக்கின்றன. குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாகக் கலசத்தினுள் போட்டார்கள். அதற்கான காரணத்தைத் தேடிப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. வரகு (Kodo Millet) மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருப்பது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

இந்த தானியங்கள் மின்னலை சக்தி இழக்க வைத்து விடும். இவ்வளவுதானா? இல்லை பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. அதை இன்றைக்கு சம்பிரதாயமாகவே மட்டும் கடைபிடிக்கிறார்கள். காரணத்தைத் தேடினால் அந்தத்தானியங்களுக்குப் பன்னிரெண்டு வருடங்கள் வரை அந்த மின்னலை தாங்கும் சக்தி இருக்கிறது. அதன் பின் அது செயல் இழந்து விடுகிறது!! இதை எப்படி அப்போது அறிந்திருந்தார்கள்...?! சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. அது நாலாபுறமும் 75000 சதுர மீட்டர் பரப்பளவைக் காத்து நிற்கிறது! இது ஒரு தோராயமான கணக்குத் தான். இதைவிட உயரமான கோபுரங்கள் இதைவிட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றன. இதற்கமைவாகவே "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம் முன்னோர்கள் கூறி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பெருமை மிக்க கோபுரம் எமது ஆலயதில் அமைக்கப்பட்டது மிகவும் மகிழ்வை அளிக்கிறது. அதுவும் புலம் பெயர் நாடுகளில் லண்டன் மத்தியில் அமைத்திருப்பது மிகப்பெரிய சாதனையும் அற்புதமும் ஆகும். இவ் ஆலயம் மென்மேலும் வளர்ச்சி பெற எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

லோகா சமஸ்தா சுகிநோபவந்து

**பிரம்மஶ்ரீ வாமதேவ வாமராஜக்குருக்கள்**



Aum Muruga

BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

**உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

Established 1974. Registered Charity No : 269067

200A Archway Road, London N6 5BA.

Tel : 020 8348 9835 | Fax : 020 8482 6508.

E-mail : secretary@highgatehillmurugan.com Web : www.highgatehillmurugan.org

# கோபுரத்தின் பெருமை

இறைவன் மிக உயர்ந்தவன். அவனை நுண்ணுணர்வால் மட்டுமே அறிய முடியும். எமது புல உணர்வுகளைப் படிப்படியாக ஒடுக்கி இறைவன்பால் குவித்தாலே இறைவனை நாம் அடைய முடியும் என்னும் உயர் தத்துவத்தை குறிப்பது கோபுரமாகும்.

கோபுரத்தின் அமைப்பு கீழிருந்து மேல் நோக்கி குவிந்து போவதைக் காணலாம். நாம் எமது இரு கைகளையும் கூப்பி வணங்கும்போது கோபுர அமைப்பில் வருவதைக் காணலாம். பொதுவாக எல்லா மதத்தினரும் கோபுர அமைப்பில் மிக உயர்ந்த புற வடிவத்தை தமது ஆலயத்தின் அடையாளமாகக் கொள்வர்.

கோபுரம் ஆன்மாக்களை இறைவனை நோக்கி வரவழைக்கும் இடம் மிகத் தொலைவிலேயே இறை சிந்தனையைத் தூண்டி எமது மனத்தை இறைவன் பால் ஈர்க்கும் புனித சின்னம் ஆகும். கோ என்றால் ஆன்மாக்கள், கடவுள், அரசன் என பல கருத்துக்கள் உண்டு. புரம் என்பது வியக்கும் இடம், செல்லும் இடம் என்னும் கருத்துக்களைக் கொண்டது. எனவே கோபுரம் என்றால் கடவுள் வசிக்கும் இடம் ஆன்மாக்கள் செல்லும் இடம் என்ற கருத்துக்களைத் தருகிறது.

கோபுரத்தின் உச்சியில் கலசம் வைத்திருப்பார்கள். அது நுண்ணிய புள்ளியில் முடியும். எமது மனத்தை இறையை நோக்கி முறையாகக் குவித்தால் நாம் இறையருள் பெறலாம் என்பதைக் குறிக்கிறது.

பல்வேறு விதமான சிற்பங்கள் கோபுரங்களில் காணப்படும். உலகியலைக் கடந்து நாம் இறைநிலையை அடையமுடியும் என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது.

இறைவன் அனைத்திலும் உயர்வானவன். பூமியில் இருந்து ஆகாயம் வரைக்கும் அவனே படைத்தான். ஆதலால் அவனுக்கு நன்றி கூறும் முகமாக பூமியிலிருந்து ஆகாயம் வரைக்கும் உயரமான கோபுரத்தைக் கட்டி மகிழ்கிறோம் என்பதும் கோபுர தத்துவத்தில் அமைந்துள்ளது. விஞ்ஞான உலகத்தில் தொழில் நுட்ப சாதனங்களின் பரிமாற்றத்திற்கு கோபுரம் (tower) எவ்வாறு அவசியமோ அதேபோல் பரந்து இருக்கும் இறையருளை ஆலயத்துள் யைப்படுத்த அதாவது ஒன்றுபடுத்த கோபுரம் முன்னிற்கிறது.

உன் பணி செய்து கிடக்கும் அன்பன்

**மா. ஸ்ரீகாந்தா**

Religious & Education Secretary

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

**LONDON SRI MURUGAN TEMPLE**

REGISTERED CHARITY NO: 271097

78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF

TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407

www.londonsrimurugan.org


**வாழ்த்துரை**

இங்கிலாந்து நாட்டின் லண்டன் மாநகரில் இந்து சமயம் வேரூன்றி சைவ சமயம் தழைக்கக் காரணமாக திகழ்வது உயர்வாசற்குன்று முருகன் ஆலயமாகும்.

1986ம் ஆண்டு மிக கோலாகலமாக நடைபெற்ற மஹா கும்பாபிஷேக பெருவிழாவிலே சென்னை காளிகாம்பாள் கோயில் சிவாசாரியார். நயினாதீவு பரமேஸ்வர சிவாசாரியார் மற்றும் அனேக சிவாசாரியார்கள் பெருமக்களோடு நானும் பங்கேற்று. அதனை தொடர்ந்து நடைபெற்ற திருவிழாக்கள். மேலும் இரண்டு மஹாகும்பாபிஷேகங்கள் இவற்றிலும் கலந்து கொண்டு முருகப்பெருமானுக்குச் சேவையாற்றியதை எனது வாழ்க்கையில் பெரும்பேறாகக் கருதி மகிழ்கிறேன்.

முதல் கும்பாபிஷேகம் நடைபெற்று 30ம் ஆண்டு நிறைவு பெறுகின்ற தருணத்தில் புதிய சிற்பக்கலை சிறப்போடு கூடிய புதிய ராஜகோபுரம் அமைத்து அடியார்கள் புடைசூழ மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற போதும் அதிலும் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கப்பெற்றதை எண்ணி வியந்து மெய்சிலிர்க்கிறேன்.

முறையான நித்திய பூஜைகள். சிறப்பான மகோற்சவம், மக்கள் எல்லோரும் பக்திப் பெருக்கோடு கலந்து மகிழ்கின்ற தேர்த்திருவிழா பக்தப் பெருமக்களின் பிரார்த்தனைகளையும் நேர்த்திகளையும் நிறைவேற்றித் தரும் நீலமயில் வாகனனுக்கும் பக்தர்கள் நிறைவேற்றும் காவடி பால் குட பூஜைகள் அபிஷேக ஆராதனைகள் இவற்றால் உயர்வாசற்குன்று ஸ்ரீ முருகன் ஆலயம் குறையாத தெய்வ சாந்நித்தியத்தோடு திகழ்ந்து வருகிறது.

சிவாசாரியார்களின் வேத ஆகம வழிபாட்டாலும் பண்ணிசை பாவாணர்களின் திருமுறை பாராயணங்கள் ஆலய அறங்காவலர்கள் நிர்வாக குழுவினர் சபையின் திறமையான வழி நடத்துதலிலும் அடியார்களின் அருமையான ஒத்துழைப்பிலும் சிறந்து விளங்குகின்ற உயர்வாசற்குன்று ஸ்ரீ முருகன் ஆலயம் கலியுக வரதன் கந்தப் பெருமானின் பேரருளில் இன்றும் வளர்ந்து சேவைகள் பெருகி நாடிவரும் பக்தர்கள் குறைதீர்த்து வினையகன்று பேரின்பம் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானைப் பிரார்த்தித்து மகிழ்கிறோம்.

இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம்

***கைலை சிவஸ்ரீ நாகநாதசிவம் சிவாசாரியார்***

**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org Charity No: 1143043

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

ஆலயங்கள் அமைத்து, அங்கு தெய்வ திருவுருவச் சிலைகளை எழுந்தருளச் செய்து அவற்றை வழிபடுவதன் மூலம் ஆத்ம ஈடேற்றமும், இஷ்ட சித்திகளையும் பெற்றுய்யும் வழிமுறைகளை ஞானிகளும், முனிவர்களும், சித்தர்களும் எமக்கு கற்றுத் தந்துள்ளனர்.

அத்துடன் கோயில் திசை நான்கிலும் விண்ணை முட்டும் பெரிய கோபுரங்களை நிர்மாணித்து அவற்றின் சக்தியால் உயிர்கள் நல்ல முறையில் வாழும் **சூட்சுமத்தினையும்** ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்". "ஆலயம் தொழுவது சாலவும் நன்றே" என்ற முன்னோர்களின் பொன் மொழிகள் இதன் பயன் கருதியே கூறியவை.

கதிர்வசீசு பற்றி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எனது முன்னோர் அறிந்திருந்தார்கள் என்பது அவர்களால் எமக்கு அறிமுகம் செய்த ஆன்மீக தடயங்கள் எடுத்தியம்புகின்றன.

நாம் பல நல்ல, தீய கதிர் வசீசுகள் நிறைந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மூலகங்களில் சக்திமாற்றம் ஏற்படும் போது கதிர்வசீசு தோன்றுகின்றது. இதனை நாம் கண்ணால் காண முடியாது. ஆனால் அதன் தாக்கங்களை எம்மால் உணரமுடியும். நல்ல கதிர்வசீசு சக்திகளை வெளிப்படுத்தும் வகையிலேயே ஆலயங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஆகம விதிப்படி கோயில் அமைக்கப்பெற்று, அபிஷேகிக்கப்பட்டு, காலம் தவறாது (12 வருடங்களுக்கு ஒருமுறை) கும்பாபிஷேகம் செய்யப்பெற்று வழிபாடு நடந்து கொண்டிருக்கும் கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல் தங்கத்தாலும் அல்லது செம்பினாலும் செய்யப்பட்ட கலசங்கள் தனது கூரிய முனை வழியாக ஆகாயத்தில் உள்ள உயிர் சக்தி என்று அழைக்கப்படும் பிராண சக்தியை கிரகித்து வெளிவசீகின்றன. அந்த சக்தியை நம் உடல் பெறுவதால் புத்துணர்ச்சி, புது உணர்வு, உள்ளத் தூய்மை, ஆன்மீக ஈர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்பு சக்தி அடைகிறோம்.

**காலையில் கோபுர தரிசனம் - நோய் நீக்கும்**
**மதியம் கோபுரதரிசனம் - செல்வ வளம் பெருகும்**
**மாலையில் கோபுர தரிசனம் - பாவம் போக்கும்**
**இரவு கோபுர தரிசனம் - வடு பேரு கிடைக்கும்**

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது பழமொழி என்பதைக் விட அதை ஒரு வாழ்வியல் தத்துவமாய் கருதிட வேண்டும். ஆலய வழிபாட்டுக்கு செல்ல இயலாதவர்கள் கூட தூரத்தே இருந்து கோபுரத்தை வணங்கிச் செல்வதை

















McALPINE



இன்றைக்கும் காண முடியும்.

கோபுரங்களை **ஸ்தூல லிங்க**மாகவும், இறைவனின் பாதங்களாகவும் பாவித்தனர். கோபுர வழிபாடு முழுமையான ஆலய வழிபாட்டுக்கு இணையானது என்ற நம்பிக்கை காலம் காலமாய் இருந்து வருகிறது. சிற்ப சாஸ்திரத்தின் படி கோவில்களின் அமைப்பானது மனித உடலின் வடிவத்தில் அமைய வேண்டுமென வரையறுத்திருக்கின்றனர். இதனை **"ஷேத்திரம் சரீர பிரஸ்தாரம்"** என்பர்.

கோயிலின் உள்ளே இருக்கக்கூடிய இறைவனின் பிரதிபிம்பம் தான் கோபுரங்கள், உதாரணமாக ஒரு கோயிலுக்குள் கணபதி. முருகன், பெருமாள். அம்மன். கிருஷ்ணர். இராமர் போன்ற தெய்வங்களின் விக்ரஹங்கள் உண்டு என்பது நாம் அறிந்த ஒன்றே! கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள். உடல் ஊனமுற்றோர் போன்றோர் கோபுரத்தைத் தரிசித்தாலே போதும், உள்ளேயிருக்கக்கூடிய எல்லாத் தெய்வங்களின் **பிரதிபிம்பம்** தான் கோபுரம்,

நாம் தூரத்திலிருந்து பார்க்கும்போது கோபுரங்களும். கோபுர கலசங்களும் தான் நம் கண்ணுக்குத் தெரியும், மேலும் கோபுரத்தின் உள்ளேயிருந்து வரக்கூடிய காற்று நம் உடலை அழகாக வருடியும். மருத்துவ குணம் மிக்கதுமாக இருப்பது சிறப்பு, ஆகவே கோபுரத்தைத் தரிசித்து கோடி புண்ணியம் பெறுவோம்!

ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்ததாம். **என்ன காரணம்?** கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களிலும் அதில் இடப்பெற்றுள்ள தானியங்களும், உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை (earth) கலசங்களுக்கு கொடுக்கின்றன.

(நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள்) ஆகியவற்றை கலசங்களினுள் வைத்துள்ளார்கள். குறிப்பாக **வரகு** தானியத்தை அதிகமாக வைத்தார்கள். காரணம் ஆச்சரியமாக இருக்கிறது, **"வரகு"** மின்னலை தாங்கும் அதீத ஆற்றலை பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

ஒரு இடத்தில் எது மிக உயரமாக உள்ளதோ அதுவே அந்த இடத்தின் இடி தாங்கி. அது தான் முதலில் மின்னலின் தாக்கத்தை "எர்த்" ஆக்கும். எனவே ஊரின் உயர்ந்த கட்டிடமாக திகழும் இக் கோபுரம் மின்னல் தாக்கத்தில் இருந்தும் ஊரை பாதுகாத்துக் கொள்கின்றது.

கர்ப்பக்கிரக கோபுரத்தின் (ஸ்தூபி) மேல் வைக்கப்பட்டுள்ள கலசங்கள் அதே போல் பிராண சக்தியை கிரகித்து கலசத்தின் நேர் கீழே உள்ள இறை பீடத்திற்கு இடையறாது அனுப்பி கொண்டிருக்கிறது. இந்த சக்தி பீடத்தின் அடியில் உள்ள தங்கத்தாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட **மந்திர சக்கரங்கள்,**

**யந்திரங்கள்**தன்பால் இழுத்து தான் அமையப் பெற்றிருக்கும் தன்மைக்கு ஏற்ப பீடத்தின் மேல் தன் சக்தியை வெளிப்படுத்துகிறது. சில **குறியீடுகளும், யந்திர தகடுகளும்**, இந்த சக்தியை முழுவதும் ஈர்த்து விடுகின்றன.

இந்த பிராண சக்தியின் அளவை மேலை நாட்டு **விஞ்ஞானி போவிஸ்** கண்டு பிடித்துள்ளார். இதிலிருந்து வெளிப்படும் சக்தியை (14 ,000 போவிஸ்) நம் உடலில் உள்ள உயிர் அணுக்கள் தாங்க இயலாது. எனவே தான் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை அந்த சக்தியை பிரித்து ஒன்பது முனைகள் வழியாக வெளியேற செய்கிறது.

அந்த சக்தி கர்ப்பக்கிரத்தின் வாயில் வழியாக வெளியே வருகின்றது. அங்கு இறைவனை வணங்கி நிற்கும் நம் மீது படுகிறது. அப்போது தீப ஆராதனை காட்டப்படும்போதும், மந்திரங்கள் செபிக்கப்பெறும்போதும் அந்த சக்தி மேலும் தூண்டப்பெறுகின்றது. கைகளை இணைத்து, மேலே உயர்த்தி வணங்கும்போது - கை விரல்கள் வழியே அந்த சக்தி நம் உடம்புக்குள் ஊடுருவுகிறது.

இதனால் ஆன்மீக உணர்வு, சக்தி நம்மீது பரவி மனதில் உள்ள கவலைகள், குடும்பத்தில் உள்ள பிரச்னைகள், உடல் நோய்கள் அனைத்தையும் போக்கி ஆனந்தத்தை கொடுக்கிறது.

கர்ப்பக்கிரத்தில் கிழக்கு அல்லது வடக்கு திசைகளில் நீர் செல்லும் பொருட்டு கோமுகியுடன் கூடிய ஓர் துவாரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த துவாரத்தின் வழியே செல்கின்ற நீரிலும் கலந்து பிராண சக்தி வெளிப்படுகிறது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சதுர வடிவ தொட்டியில் விழும் நீரை கோயிலை வலம் வரும் நாம் அந்த இடத்தில் வந்தவுடன் எடுத்து கண்ணிலும் சிரசிலும் ஒற்றிக் கொள்கிறோம். அந்த சில நிமிடங்களில் நம் மீதும் பிராணசக்தி பரகிறது. நாம் உள்ளத்தூய்மை, உடல் தூய்மை அடைகின்றோம். கோபுர தரிசனம் செய்து கோடி புண்ணியம் பெறுவோம்.

**சிவஸ்ரீ இரகுகமலநாதக் குருக்கள்**



Aum Muruga
BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST
உயர்வாசற்குன்று முருகன் கோவில்
Established 1974, Registered Charity No : 269067
200A Archway Road, London N6 5BA.
Tel : 020 8348 9835 | Fax : 020 8482 6508.
E-mail : secretary@highgatehillmurugan.com Web : www.highgatehillmurugan.org

# The Board of Trustees and Advisory Council Members of Highgatehill Murugan Temple

I understand from the Treasurer and the Secretary of the Advisory Council that you are having a function to honour all those who contributed towards the construction of the Goupuram and lift construction at Highgatehill Murugan Temple and further have requested me to send a message to commemorative publication (Malar).Thanks for the information and request.

I would like to take this opportunity to send you all my heartfelt congratulations for having completed all the work since I left my Chairmanship in September 2012 and would further take liberty in thanking the present Chairman,for all his sincere hard work put in towards this project.I would like to take this opportunity to thank the Isthapathies for their excellent work.

I am naturally pleased to note that this projet commenced and carriedout during my chairmansip of the Board of Trustees,and wish to mention the fact that a great service was carried out by Mr Jeyarajah,who carriedout his duties as a Resident Engineer,in every sense of that Civil Engineering work, under very difficult circustances. He carried out this work as a service to God and not for any material benifit. My sincere thanks to him and to the contractor who carried out the ground work and pile foundations.

I wish the function every success and may the presiding DEITY SIVASHANMUGAR shower you all with His choiest Blessings.

**Kanthiah Ranganathan,**
Past Chairman, Brittania Hindu (Shiva) Temple Trust



Aum Muruga

**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**

**உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

Established 1974, Registered Charity No : 269067
200A Archway Road, London N6 5BA.
Tel : 020 8348 9835 | Fax : 020 8482 6508.
E-mail : secretary@highgatehillmurugan.com Web : www.highgatehillmurugan.org



# *Mr K .Nithiananthan*

**TRUSTEE, BHTT**

Dear Devotees, Members and well wishers of the Britannia Hindu (Shiva) Temple Trust

I am pleased to have been asked to pen a few words reflecting on the achievements of everyone involved with the temple projects during the year 2015, all of them successfully completed with your support, good wishes and God's grace.

The main highlights were the completion and inauguration of the **Gopuram** and **Elevator/Lift services**.

The beautiful Gopuram features grand design and intricate detail of artisans (Stapathies) who herald from a long South Indian lineage in temple construction. We are grateful to them for their quality, timely and disciplined workmanship, which allowed us to celebrate its consecration on 17th August 2015. The consecration itself followed traditional rituals and spiritualised through the prayers of devotees and priests. A high workload was also born by our eminent priests in the lead up to the event and on the day. We are thankful to them for all their sincere efforts in bringing about a memorable landmark event for the temple and us.

The long awaited lift was also successfully completed, albeit without a notable inauguration. In hindsight it deserves considerable recognition for it has brought great benefit to elderly and physically challenged devotees who are able to reach all levels of the main temple premises without having to climb steps. The choice of its location, design, material suppliers and installation were all professionally executed with the minimum of disruption to the functioning of the temple.

It goes without saying that significant changes to the construction of the temple of this nature requires the input, patience, cooperation and overall professionalism of many people. I am pleased to say that they all came together and worked well as a team to complete the tasks to everyone's satisfaction. I would also like to acknowledge the support provided by Haringey Councillors and the police force.

I also take this opportunity to reach out to the next generation directly and through our senior patrons encouraging them to participate actively in temple administration and/or management to help ensure high standards of continuity.

Lastly, but not least, I thank everyone one behalf of the Trust for the significant donations and generous collections which were well over and above normal income in support these projects. It is much appreciated.

**Mr K Nithiananthan, Trustee**

## EUR ING RASIAH JEYARAJAH BSc (Hons), MICE, CEng.(England), MIEI, CEng.(Ireland), MIMM, Member of British Tunnels and Tunnelling Society

**Education and Professional Status**

Chartered Engineer of The Engineering Council – C Eng.
European Engineer – EUR ING
Chartered Engineer of Ireland – C Eng.
1976: BSc (Honours) Civil Engineering - UK
Member of The Institution of Civil Engineers - MICE
Member of The Institution of Mining and Metallurgy - MIMM
Member of British Tunnels and Tunnelling Society
Member of The Institution of Engineers of Ireland - MIEI

**His Main Involvement in the Temple:**

Initial brief given by the Board of Trustees was the construction of a lift to provide access to all three floors of the Temple for the elderly and disabled devotees. In his design he has exceeded the expectation of the Board of Trustees by providing a Magnificent Gopuram similar to the ones in our Hindu temples in South India and a grand entrance to the temple.

He has searched far and wide to get the best available Sthapathies to do the construction and finishing touches to this magnificent Gopuram. He created the Emergency Exit from the basement hall to Wembury Road. He carried out major Renovation and Redesigned the Ladies Toilets in the Temple and Wembury Road Annexe to the priests accommodations including the access from Wembury Road to the priests quarters with a new iron gates.

Mr. Jeyarajah started this project in 2009 and completed in 2015.During this period he offered his services free of charge, working long hours and 7days of week, because of his devotion to Lord Murugan. He wrote the Fire Safety Management and Evacuation Procedures.

The complete project was designed and project managed including obtaining of Building Control and Planning Permission from Haringey Council by R.Jeyarajah.



R.Thiyagaran






N.Saravanan T.Palanivelu R.Ganesan K.rajkumar

## Brief notes about
## Chief Sthapathy and his team of workers:

Names of Sthapathy are as follow:

a) Mr. Raju Thiyagarajan - *Chief Sthapathy/Team Leader*
b) Mr. Thangaraju Palanivelu - *Deputy Sthapathy*
c) Mr. Narayanasamy Saravanan - *Deputy Sthapathy*
d) Mr. Raji Ganesan - *Assistant Sthapathy*
e) Mr. Kaliyamoorthy Rajkumar - *Assistant*

Above those workers except Rajkumar worked together in Malaysia for some time involved in creating Hindu architectural works in several temples and Hindu cultural park for the public. Several years ago the chief Sthapathy created a 140 feet free standing Murugan statue in front of Batu caves temple, Kuala Lumpur, Malaysia. This Muragan statue is very prominent and popular in Kualar Lumpur and on every 'Thaipusam' day his name will be published in the local papers. He became very popular in Malaysia and India. He has very good creative talent and his master piece of work is still appreciated in Kualar Lumpur and India.

R.Jeyarajah personally visited and contacted him in Malaysia to discuss our Gopuram work. After lengthy discussion he agreed to come forward to start our Gopuram work. Temple Management was so pleased to bring him and his team of workers here to this country for our Gopuram work. Our understanding is that he is going to be engaged with his next project to create another 142 feet Murugan in Salam, India.

# HIGHGATEHILL MURUGAN TEMPLE
## FRONT VIEW
## (Lift Project)



